செய்தி வெளியீடு எண்.44 நாள்.02.06.2021

சென்னை மாவட்டத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவ உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் சட்ட ரீதியான உதவி ஆகியவற்றை வழங்கிடும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த சேவை மையங்கள் (One Stop Crisis Centre) தற்போது சென்னை சிங்கார வேலர் மாளிகை 8–வது தளத்தில் உள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது.

பெண்கள் தங்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வரதட்சணை, குடும்ப வன்முறை, பாலியல் வன்கொடுமை மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை ஆகியவை குறித்த புகார்களை சென்னை மாவட்ட சமூக நல அலுவலகத்தில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த சேவை மையங்களுக்கு தெரிவிக்கலாம். இந்த ஒருங்கிணைந்த சேவை மையங்கள் மூலம் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மகளிர் (ம) குழந்தைகளுக்கு தேவைப்படும் துரித சேவைகளான மருத்துவ உதவி, காவல் உதவி, சட்ட உதவி மற்றும் மனநல ஆலோசனை ஆகியவை வழங்கப்படும்.

புகார் தெரிவிக்க தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்.

**Women Help Line – 181**
**Child Help Line – 1098**
**Senior Citizen Help Line – 1253**

முகவரி – மாவட்ட சமூக நல அலுவலகம், சென்னை மாவட்டம்,
தொலைபேசி எண். 044–25264568

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01